Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

16.05.2020 சனிக்கிழமை

## ஊரடங்கை மீறிய 55,706 பேர் கைது!

### 12, 482 பேர் மீது வழக்கு
### 4, 808 பேருக்கு அபராதம்

கொழும்பு, மே 16
இலங்கையில் கடந்த மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரையான காலப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 55 ஆயிரத்து 706 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் 15 ஆயிரத்து 216 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

2

### பாடசாலைகளை
## மீண்டும் திறக்க தீர்மானமில்லை

கொழும்பு,மே 16
கொரோனா வைரஸ் தாக்கத்தால் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்து இதுவரை அரசாங்கம் தீர்மானம் மேற்கொள்ளவில்லை. எனினும், பாடசாலைகளை மீண்டும் திறக்கும் முறைமை குறித்து தொடர்ந்தும் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளதாவது, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாடசாலைச் செயற்பாடுகளை முன்னெடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தங்களது பாடசாலை

2

## புதினம் தெரியுமோ?

ஆயுதம் தூக்கினதை தான் ஏற்கமாட்டன் எண்டு ஒராள் சொல்லி, அறம்புறமா வாங்கிக் கட்டினவரெல்லோ. அதுக்கு கூட்டமைப்பில இருக்கிறவை, இல்லாதவை மாற்றுக் கட்சிக்காரர் எண்டு எல்லாரும் கருத்துச் சொல்லிட்டனம். ஆனா வழக்கமா எல்லாத்துக்கும் அறிக்கை விடுகிற கிளிநொச்சியைத் தன்ர கோட்டை எண்டு சொல்லுற ஆள் மட்டும் பம்மிட்டார். இத்தனைக்கும் அடுத்த தேசியத் தலைவர் தான் எண்ட ரேஞ்சுக்கு பில்டப் எல்லாம் குடுத்து, தலைவர் மாதிரியே தீபமெல்லாம் ஏத்தின ஆள் கண்டியளோ. அப்பிடிப்பட்ட ஆள், உண்மையாவே இயக்கத்தில விசுவாசம் இருக்குமெண்டா, ஆயுதம் தூக்கினது பிழை எண்டு சொன்னவுடனேயே வேட்டியை மடிச்சுக் கட்டிக் கொண்டு களத்தில இறங்கியிருக்க வேணும். ஆனா தானும் இறங்காம, தன்ர அல்லக்கை, நொள்ளக்கை கூட இதைப் பற்றி மூச்சுக் காட்டக்கூடாது

உள்ளே...

2

# சஜித் தலைமையில் நிழல் அமைச்சரவை!

### யோசனை முன்வைப்பு விரைவில் இறுதி முடிவு

கொழும்பு, மே 16
சஜித் பிரேமதாச தலைமையில் நிழல் அமைச்சரவையொன்றை அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி உத்தேசித்துள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. "இப்படியானதொரு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தாலும் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. விரைவில் இது குறித்து தீர்மானமொன்று எடுக்கப்படும்." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நளின் பண்டார இன்று சனிக்கிழமை தெரிவித்தார்.

2



## கடும் மழை: இருவர் சாவு

கொழும்பு, மே 16
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட இடரால் கேகாலை மாவட்டத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. கேகாலை மாவட்டத்தில் வட்டாராம ஹெல பகுதியில் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 48 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்

2

## சு.க. மத்திய செயற்குழு திங்களன்று கூடுகிறது!

கொழும்பு, மே 16
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு எதிர்வரும் திங்கட்கிழமை கூடவுள்ளது. கொழும்பு, காலி வீதியிலுள்ள கட்சித் தலைமையகத்தில் இந்த கூட்டம் இடம்பெறவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுத் தேர்தல் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார். (எ)

## இன்றிரவு முதல் மீண்டும் ஊரடங்கு

### திங்கள் தளர்த்தப்படும்

கொழும்பு, மே 16
இன்றிரவு 8 மணி முதல் எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 5 மணிவரை நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படவுள்ளது. கொழும்பு

2

## கடற்படையில் கொரோனா தொற்று 499 ஆக உயர்வு!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 16
இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களில் 499 பேர் கடற்படையினர் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா இன்று தெரிவித்தார். அதேவேளை, அவர்களுடன் நெருக்கமா

2

## நலமடைவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு!

### இதுவரை 520 பேர் வீடுகளுக்கு
### 406 பேர் வைத்தியசாலைகளில்

கொழும்பு, மே 16
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 43 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து தொற்றிலிருந்து

2

## 45,000 வீடுகளுக்கான மின்சாரம் துண்டிப்பு

கொழும்பு, மே 16
பலத்த மழை மற்றும் காற்று காரணமாக 45 ஆயிரம் வீடுகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. மின்சார கம்பிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக மின் சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

2

## ராஜித சேனாரத்னவுக்கு பி.சி.ஆர் பரிசோதனை!

கொழும்பு, மே 16
சிறைதண்டனை அனுபவித்துவரும் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என சிறைச்சாலை திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. ராஜித சேனாரத்ன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சரணடைந்ததை அடுத்து மே 13 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

2

# மீண்டும்....

களை சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கு அமைவாக, எவ்வாறான நடவடிக்கைளை மேற்கொள்வது என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு பாடசாலைகளின் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
வகுப்பறைகளில் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணியவாறு கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது, ஏற்படும் இடவசதி தொடர்பான பிரச்சினை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
இந்த நிலையில், இரண்டு பிரிவுகளாக பாடசாலை கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் அது குறித்து இதுவரை இறுதியான தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.
பாடசாலைகள் திறக்கப்பட்டதன் பின்னர், குறித்த விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்வதற்கான தயார்படுத்தல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
இதன்படி, பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் வலயக் கல்விப் பணிமனை மற்றும் மாகாணக் கல்விக் காரியாலய அதிகாரிகள் ஆகியோருக்குத் தெளிவுபடுத்தப்படும். என்றுள்ளது. (க)

# ஊரடங்கை...

நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் கடந்த மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு வருகின்றது.
நேற்றுக் காலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரையான 24 மணித்தியால காலப்பகுதியில் மட்டும் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 559 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் 205 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. அத்தோடு, கடந்த மார்ச் 18ஆம் திகதி முதல் இன்று காலை 6 மணி வரையான காலப்பகுதியினுள் ஊரடங்குச் சட்டத்தை மீறியமை தொடர்பில் 12 ஆயிரத்து 482 மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது எனவும், 4 ஆயிரத்து 808 பேருக்கு எதிராக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (எ22)

## ராஜித சேனாரத்னவுக்கு

வெள்ளை வாகன ஊடக சந்திப்பு தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தால் அவருக்கு வழங்கப்பட்ட பிணை, மேல் நீதிமன்றத்தால் இரத்துச் செய்யப்பட்டதை அடுத்தே அவர் கைதானார்.
இதனையடுத்து கொழும்பு பிரதம நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இதன்படி நீர்கொழும்பு பல்லன்சேனவிலுள்ள இளம் குற்றவாளிகளை சீர்திருத்தும் மையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.
'கொரோனா' வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், புதிதாக விளக்கமறியலில் வைக்கப்படும் கைதிகள், சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே உத்தரவிடப்பட்ட சிறைச்சாலைகளில் அடைக்கப்படுகின்றனர். இதற்கமையவே ராஜிதவும் தற்போது சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
21 நாள்களுக்கு பின்னர் அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்படும் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-44)

---

எண்டு வேற போன் போட்டுச் சொன்னாராம்.
ஆள் சும்மா பம்மேலை பாருங்கோ. அதுக்குப் பின்னால கனக்க 'டீலிங்' இருக்கு பட்சி சொல்லுது . எலெக்சன் வரேக்க அந்த டீலிங் எல்லாம் ஒவ்வொண்டா வெளில வரத்தானே போகுது. அப்ப சனத்துக்கு உண்மை விளங்கும்.

✦ ✦ ✦ ✦

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர தலைவர் உண்மையா ஆரெண்டு இன்னமும் குழப்பமாத்தான் இருக்கு. காரணம் என்னெண்டு சொல்லுறம் . கேளுங்கோ. மற்றக்கட்சிகளை மாதிரி கூட்டமைப்புக்கு எண்டும் உத்தியோகபூர்வமா ஒரு 'ருவிட்டர்' எக்கவுண்ட் இருக்கு. மற்றக் கட்சிகளின் உத்தியோகபூர்வ அறிக்கையள், கட்சித்தலைவர், செயலாளர், எம்.பிக்கள் எண்டு முக்கியஸ்தர்களின் கருத்துக்கள் , எல்லாம் அந்தக் கட்சின்ர ருவிட்டர் பக்கத்தில வரும்.
ஆனா கூட்டமைப்பின்ர ருவிட்டர் மட்டும் விதிவிலக்கு. அதில தனியச் சுமந்திரன்ர கருத்துகள் மட்டும் தான் வரும் கண்டியளோ. ஆயுதம் தூக்கிறது பிழை எண்டு அவர் சொன்ன பேட்டி, அதுக்கு அவரின்ர செம்புகளின்ர முட்டுக்குடுப்பு எல்லாம் அந்த ருவிட்டர் எக்கவுண்டில வந்திச்சு. அப்ப அவர் சொன்ன அந்தக் கருத்து சுமந்திரன்ர தனிப்பட்ட கருத்தில்லை, கட்சியின்ர கருத்து எண்டு தானே எல்லாரும் நினைப்பின. அவ்வளவு ஏன், சுமந்திரன்ர கருத்து பற்றி கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தர் ஒரு அறிக்கை விட்டவர் எல்லோ அது கூட கூட்டமைப்பின்ர உத்தியோகபூர்வ ருவிட்டர் கணக்கில போடுப்படேல. ஆனா சுமந்திரன் தும்மினால் கூட அந்தக் கணக்கில சாணக்கியத் தும்மல் எண்டு வருகுது. இப்ப உண்மையா கூட்டமைப்பின்ர தலைவர் ஆர் எண்ட சந்தேகம் உங்களுக்கும் வருகுதெல்லோ?

- பட்சி

# சஜித் தலைமையில்

கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான தற்போதைய அமைச்சரவையின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காகவே குறித்த நிழல் அமைச்சரவை அமைக்கப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது.
நல்லாட்சியின்போது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தவர்களுக்கு, துறைசார் நிபுணத்துவம் அடிப்படையில் நிழல் அமைச்சரவையில் பதவி வழங்கப்படவுள்ளது.
"தேர்தல் காலத்தில் ஆட்சியாளர்கள் அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடும். அத்துடன், குறுகிய ஆட்சிகாலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள சில திட்டங்களில் மோசடி இடம்பெற்றுள்ளது. இவை குறித்து ஆராய்வதற்கும், தொடர் கண்காணிப்புகளை செலுத்துவதற்கும் நிழல் அமைச்சரவை என்ற கட்டமைப்பு சிறப்பாக அமையும்." என்று மற்றுமொரு உறுப்பினர் தெரிவித்தார்.
அதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ச எதிரணியில் இருந்தபோதும், நிழல் அமைச்சரவையொன்று உருவாக்கப்பட்டு, அதில் நிழல் பிரதமராக அவர் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-44)

# கடற்படையில் கொரோனா...

கப் பழகிய 35 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். கடற்படையினருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்ட வரலாறு தெரியும் என்றபடியால் அது தொடர்பில் எவரும் அச்சமடையத் தேவையில்லை எனவும் அவர் கூறினார். (எ

# இன்றிரவு முதல்....

மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நேற்றிரவு 8 மணிக்கு அமுலாக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று அதிகாலை 5 மணிக்கு தளர்த்தப்பட்டது.
கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் எதிர்வரும் 18 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர், எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நாளாந்தம் இரவு 8 மணிமுதல் அதிகாலை 5 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ள நிலையில், கடந்த 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இயல்பு வாழ்க்கையை மீள ஆரம்பிக்கும் பணிகள் இன்று வரை தொடர்கிறது. இந்த நிலையில், எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை அந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க)

# நலமடைவோரின்....

பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 477 இலிருந்து 520 ஆக உயர்ந்துள்ளது. நேற்று வரை தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 935 பேரில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 406 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு மருத்துவமனையில் 109 பேரும், பொலனறுவை வெலிக்கந்தை ஆதார மருத்துவமனையில் 27 பேரும், கொழும்பு கிழக்கு முல்லேரியா ஆதார மருத்துவமனையில் 63 பேரும், சிலாபம் இரணவில மருத்துவமனையில் 06 பேரும், மட்டக்களப்பு காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் ஒருவரும், வெலிசறையிலுள்ள கடற்படை பொது மருத்துவமனையில் 172 பேரும், ஹோமாகம ஆதார மருத்துவமனையில் 28 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனிடையே மேலும் 106 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-22)

# கடும் மழை:

என்று பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை, வல்தெனிய பகுதியில் வீடு ஒன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 65 வயதுடைய பெண் காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
கேகாலை அவிசாவளை பிராதன வீதியிலிருந்து கொட்டியாகும்புர பகுதி வரை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. சிறிய வாகனங்களை மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த)

# 45,000 வீடுகளுக்கான...

காலி, களுத்துறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி உள்ளிட்ட மாவட்டங்களிலேயே மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
வீழ்ந்துள்ள மின்சார கம்பிகளை மீள இணைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் மின் சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். நிலவும் மழையுடனான வானிலை காரணமாக இந்த பணிகளை துரிதப்படுத்த முடியாதுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (எ-22)

# ஐ.தே.கவுடன் இணைவது எப்போதும் சாத்தியமற்றது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, மே 16

ஐக்கிய தேசியக் கட்சியுடன் எதிர்காலத்தில் இணைவது என்பது சாத்தியமற்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எமது ஆதரவாளர்கள் மற்றும் வாக்காளர்கள் ஐ.தே.க.வுடன் இணைவதை விரும்பவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்கள் ரவி கருணாநாயக்க போன்றவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பற்றி சாதகமாகப் பேசுகிறார்கள். அழைப்பு விடுக்கப்பட்டால் அவர்களுடன் இணைவது குறித்து பரிசீலிப்பேன்.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை தோற்கடிப்பதே. நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முற்றிலும் எதிரானவர்கள் அல்ல. ஆனால் தற்போது அதன் தலைமைத்துவத்துடன் இணைந்து பணியாற்ற விரும்பவில்லை.

கொரோனா வைரஸிற்கு எதிரான செயன்முறையில் அரசாங்கம் கையாண்ட விதம் தொடர்பாக இன்னும் சந்தேகம் உள்ளது.

தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கம் தற்போது மும்முரம் காட்டி வருகின்றது ஆனால் இந்த நோயை எதிர்த்துப் பணியாற்றிய சுகாதார வல்லுநர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் ஒப்புதலுடன் மட்டுமே இது நடத்தப்பட முடியும்- என்றார். (எ)



# ரயில் சேவைகளை அதிகரிக்க முடிவு!

கொழும்பு, மே 16

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 20 நாளாந்த ரயில் சேவைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் மேலும் அதிகரிக்கப்படவுள்ளது என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த வாரத்துக்கான ரயில் சேவை நேர அட்டவணையைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ரயில் போக்குவரத்து அதிகாரி காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ரயிலில் பயணிப்பதற்காகச் சிறப்பு அனுமதிப் பத்திரத்தைக் கோரி 11 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் ரயில் திணைக்களத்துக்கு இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்துள்ளனர்.

அத்துடன் தற்போது நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 338 பஸ்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பணிகளுக்காக பிரவேசிக்கும் பொது மக்களுக்காக இந்தப் போக்குவரத்து வசதி முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பஸ்களில் பொதுமக்கள் பயணிக்கும் போது கொரோனா வைரஸில் இருந்து பாதுகாத்து கொள்ளல் மற்றும் ஏற்படக்கூடிய இடர்கள் தொடர்பில் அறிவியல் ரீதியான தெளிவூட்டல்களை வழங்குமாறு பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீரவால் போக்குவரத்து துறை தொடர்பான நிபுணர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (எ)

# திருமணத்தை நடத்த நிபந்தனைகள் விதிப்பு

கொழும்பு, மே 16

திருமண நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படும் என்று சுகாதார சேவைப் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விதிமுறைகள் எதிர்வரும் காலங்களில் அறிவிக்கப்படும். கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக தனிநபர் இடைவெளியைப் பின்பற்றும் நோக்குடன் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் முக்கிய சமூக நிகழ்வுகளை நடத்துவதற்கு விதிமுறைகள் வெளியிடப்படவுள்ளன. குறிப்பாக திருமண நிகழ்வு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க)

# நெருக்கடிகளை தவிர்க்க மென்பொருள் உருவாக்கம்

கொழும்பு, மே 16

நாட்டை மீண்டும் வழமைக்கு கொண்டுவரும்போது அரசாங்க நிறுவனங்களில் சேவைகளைப் பெறுவதற்காக பிரவேசிக்கும் பொதுமக்களுக்கு இடையே ஏற்படும் நெருக்கடியைத் தடுப்பதற்காக மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

உரிய திகதி மற்றும் நேரத்தை வழங்கி சேவைகளை பெற்றுக் குக் கொடுக்கும் வகையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டில் கல்வி கற்கும் மருத்துவ மாணவர் டில்ஷான் அபேவர்தன உள்ளிட்ட குழுவால் இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மென்பொருள் தொடர்பில் மேல் மாகாண ஆளுநர் ரோஷான் குணதிலக்கவும் முழுமையான அனுசரணை வழங்குவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளார்.

அரசாங்க நிறுவனங்களின் இணையத்தளம் ஊடாக எதிர்காலத்தில் இந்த வசதியை வழங்க முடியும் என மருத்துவ மாணவர் டில்ஷான் அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய அரசாங்க நிறுவனங்களின் திறனைக் கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு தேவையான சேவைகளை இந்த மென்பொருள் ஊடாக வழங்க முடியும் - என்றார். (எ)

# பிளவுபட்ட ரணில் - சஜித் அணிகள் ஒன்றிணைந்தாலும் தோல்வி உறுதி

## மஹிந்த அணி கூறுகின்றது

கொழும்பு, மே 16

பிளவுபட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஒன்றிணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டாலும் மக்கள் ஆணையை இனி ஒருபோதும் பெற முடியாது. இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் பொதுத் தேர்தலில் இணைந்து போட்டியிட இரகசியப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதன் காரணமாகவே தேர்தல்கள் ஆணைக்குழு அங்கீகரித்த வேட்புமனுக்களை அவர்கள் கேள்விக்குட்படுத்துகின்றார்கள். சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை செல்லுப்படியற்றதாக்கவே கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்ட அவர்கள் அழுத்தம் கொடுக்கின்றார்கள்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைச் சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் அவர்கள் மனுத்தாக்கலும் செய்துள்ளார்கள்.

தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்ட வேட்புமனுக்களை இரத்துச்செய்யும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடையாது. நாடாளுமன்றத்துக்கு மாத்திரமே அந்த அதிகாரம் உண்டு.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கே பெரும்பாலான ஆதரவு உண்டு. கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் கூட்டப்பட்டால் நிச்சயம் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ஐக்கிய தேசியக் கட்சியினர் இரத்துச் செய்வார்கள்.

இதன் பின்னர் பொதுத் தேர்தலுக்கு மீண்டும் வேட்புமனுத் தாக்கல் செய்ய வேண்டும் . அப்போது இரு தரப்பினரும் (ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஐக்கிய மக்கள் சக்தியினரும்) இணைந்து வேட்புமனுத் தாக்கல் செய்யவே நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு அவர்கள் தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கின்றார்கள். பிளவுபட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஒன்றிணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டாலும் மக்கள் ஆணையை இனி ஒருபோதும் பெற முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் புறக்கணித்து விட்டார்கள் - என்றார். (எ-22)

# ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்த முயற்சி

## சஜீவ சேனசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 16

ரணில் ராஜபக்ச தரப்பினர் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக எத்தனை வழக்குகள் தொடரப்பட்டாலும் எமது கட்சிக்கு எந்தச் சிக்கலும் இல்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய மக்கள் சக்தி நீதியான முறையிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியை தேர்தல்கள் ஆணையகமும் வழங்கியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்சக்களுடன் கொண்டுள்ள டீல் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் எமது கட்சியின் சட்டச் சிக்கல் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். எந்தவித வழக்கை தொடர்ந்தும் எம்மை பலவீனப்படுத்த முடியாது.

நாட்டிலுள்ள சிறந்த ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்மோடு இணைந்துள்ளனர். அதனால் எந்த வழக்கையும் நாங்கள் இலகுவில் வெற்றி கொள்வோம். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் இல்லாத நிலையில், எமது கட்சி தொடர்பில் பரப்புரையை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

கடந்தகாலங்களில் ரணில் தரப்பினர்களினாலேயே எமக்கு பெரும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. தற்போது அந்த குழுவினர் எம்மை விட்டு விலகிச் சென்றுள்ளதால் எமக்கு சுயாதீனமாக செயற்பட முடியும். ராஜபக்சக்களுக்கு சவால் ஏற்படுத்தும் ஆளுமை எம்மிடம் உள்ளது. யாருடைய எதிர்ப்புகளையும் கண்டு அச்சம் கொள்ள மாட்டோம். பொதுத் தேர்தலை நடத்துதல் தொடர்பில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையில் நாடு இல்லை.

அரசாங்கம் அரசியலமைப்பை மீறி செயற்படுவதைக் கண்டும் நாங்கள் எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் இருப்பதற்கான காரணம் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை தடுப்பதற்காக அரசாங்கம் எவ்வாறான முயற்சிகளை எடுத்தாலும், அதற்கு இடையூறு விளைவிக்க கூடாது என்பதற்காகவே. அரசியலமைப்பை மீறி நிதி ஒதுக்கீடு, கடன் பெறுதல் மற்றும் நாணய அச்சிடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நாங்கள் அமைதிகாத்து வருகின்றோம்.

கொரோனாவின் நிழலில் தேர்தலை வெற்றிக் கொள்ள முயற்சிக்கும் அரச தரப்பினர், மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை விடுத்து தேர்தல் தொடர்பிலே அக்கறை செலுத்தி வருகின்றனர்- என்றார். (ஏ)



# வீதி விபத்தில் இருவர் காயம்

வவுனியா, மே 16

வவுனியா ரயில் நிலைய வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர். இருவரும் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

குருமன்காடு பகுதியில் இருந்து ரயில் நிலைய வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்தனர். விபத்துத் தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-110)



# கசிப்பு உற்பத்தி இருவர் கைது

வவுனியா, மே 16

வவுனியா தவசிக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 50 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-110)

# தனிமைப்படுத்தலை மீறியவருக்கு தண்டம்

கொழும்பு, மே 16

சுய தனிமைப்படுத்தலின் நிபந்தனைகளை மீறிய நபருக்கு, காலி மேலதிக நீதிவானால் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. சுற்றுலா பயண சிற்றூர்திச் சாரதி ஒருவருக்கே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. இவர் காலி, ஹிருபுர, படுவகே பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வர்த்தக நிலையங்களில் சுகாதார சோதனைகள்

வவுனியா, மே 16

வவுனியா மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களின் சுகாதார நடைமுறைகள் தொடர்பில் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், மாவட்டச் செயலகம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்தும் துரித நடவடிக்கையின் ஒரு கட்டமாக வவுனியாவில் உள்ள புடவை நிலையங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள், உணவகங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள், வங்கிகள் ஆகியன சோதனை செய்யப்பட்டன. முக்கியமாக கைகழுவும் இடம், சமூக இடைவெளி பேணல், முகக் கவசம் அணிதல், வேலையாள்களின் நிலை என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வர்த்த நிலையங்களை மறுஅறிவித்தல் வரை மூடுவதற்கும் இதன்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஐ-18)



# தேர்தலுக்கான வழிகாட்டல் தயாரிக்க குழு

கொழும்பு, மே 16

சுகாதாரப் பாதுகாப்புடன் தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பதைத் தீர்மானிக்க, அது தொடர்பிலான வழிகாட்டல்களைத் தயாரிக்க மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்பு குறித்த விசேட நிபுணத்துவம் கொண்ட அதிகாரி ஒருவரையும் உள்ளடக்கியதாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (க)



# ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது

சாவகச்சேரி, மே. 16

சட்ட விரோத போதைப்பொருள்களான கஞ்சா மற்றும் ஹெராய்ன் போதைப் பொருள் போன்ற வற்றை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

5 ஆயிரம் மில்லி கிராம் மற்றும் ஆயிரத்து 200 மில்லி கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தனர் என இருவரும் 130 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்தார் என ஒருவரும் இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இந்த மூவரையும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது மூவரையும் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது. (ப-9)

# தொழில்வாய்ப்பை ஏற்படுத்தும் உயர் கல்வி முறைமை தேவை

## ஜனாதிபதி கோத்தாபாய தெரிவிப்பு

கொழும்பு, மே 16

பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்து சமூகத்துக்குள் பிரவே சிக்கும் பட்டதாரிகளுக்கு இலகு வாக தொழில்களை தேடிக்கொள் வதற்கு உதவும் வகையில் உயர் கல்வி முறைமையை தயாரிக்க வேண்டும் என ஜனாதிபதி கோத் தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உள் ளிட்ட பல்கலைக்கழக உபவேந்தர் களுடன் நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:

பல்கலைக்கழகக் கல்வி பற்றி எத்த கைய வியாக்கியானங்கள் இருந்த போதும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் இளைஞர் யுவதிகளுக்கு தொழிலொன்றை தேடிக்கொள்ள முடியாதாயின் அது சரியான கல்வி முறையாக இருக்க முடியாது. பட்டதாரிகள்



தொழில் கேட்டு ஊர்வலம் செல்வ தற்கு பதிலாக தொழில்கள் அவர் களை தேடி வரும் கல்வி முறைமையே தேவையாகும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகள் சுகாதார அதிகாரி களின் பரிந்துரையின் பேரிலேயே மீண்டும் திறக்கப்படவேண்டும். தற்போது அறிமுகப்படுத்தப்பட் டுள்ள தொலைக்கல்வி முறை மையை மேலும் மேம்படுத்துவ தற்கு இதனை சந்தர்ப்பமாக பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தில் 30 வீதத்தின ரையாவது ஒன்லைன் அதாவது இணையவழிக் கல்விக்கு உட்ப டுத்த வேண்டும். உயர் தர பரீட் சையின் பின்னர் பல்கலைக்கழ கத்துக்கு நுழையும் தகைமைபெ றும் அனைவருக்கும் பல்கலைக்க ழகங்களுக்கு நுழைய முன்னர் வீடுகளில் இருந்து ஆங்கிலம் மற்றும் கணினிக் கல்வியை வழங்க திட்டங்கள் தயாரிக்கப் பட வேண்டும் - என்றார்.

பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக் கப்பெறும் மாணவர்கள் எண் ணிக்கை தொடர்பில் ஜனாதிபதி வினவியதற்கு பதிலளித்த பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இம்முறை மாணவர் அனுமதி 7 ஆயிரத்து 500 பேரால் அதிகரிக் கப்பட்டுள்ளது என்று குறிப்பிட் டார்.

ஜனாதிபதியின் தலைமை ஆலோச கர் லலித் வீரதுங்க, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அநுர திஸா நாயக ஆகியோர் உட்பட பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக உபவேந் தர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ப)

# முகக்கவசத்தை கழுத்தில் அணிவதால் பயனில்லை!

## சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்து

தென்மராட்சி, மே 16

மூக்கும், வாயும் தெரியும் வகையில் முகக் கவசத்தை கழுத்தில் அணிவ தால் கொரோனாத் தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது. உங்களையும் உங்கள் குடும்பத்தையும், சமூகத்தையும் பாது காக்க கட்டாயம் சுகாதார நடை முறை களை விரும்பிக் கடைப்பிடியுங்கள்.

இவ்வாறு பருத்தித்துறை பொது சுகாதார பரிசோதகர் பிரிவு 2 இன் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

மந்திகை சந்தைப்பகுதியில் மரக்கறி மற்றும் பழவகை வியாபாரத்தில் ஈடு படும் வியாபாரிகளுக்கான கொவிட் 19 தடுப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு புலோலி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடை பெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனாத் தொற்று யாரிடம் இருக்கிறது என்று தோற்றத்தை வைத்து இனங்காண முடியாது. சரியான விதத்தில் முகக் கவசத்தை அணிவதும் கைகளை சவர்க்காரமிட் டுக் கழுவுவதும் நபர்களிடையே மூன்றடி இடைவெளியைப் பேணுவ தும் மிக முக்கியமானதாகும். உங்க ளையும் உங்கள் குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாக்க கட்டா யம் சுகாதார நடைமுறைகளை விரும்பிக் கடைப்பிடியுங்கள் -என் றார். (ஐ-9)



# மணல் அகழ்வு, கசிப்பு உற்பத்தி தருமபுரத்தில் அதிகரிப்பு

கிளிநொச்சி, மே 16

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கனை ஈச்சமோட்டைப் பகுதியில், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 டிப்பர்களும் அதன் சாரதிகளும் இன்று கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை ஊழவனூர் பகுதியில் கசிப்பு விற்பனை யில் ஈடுபட்ட ஒருவரும், கல்மடு இரட்டைப்பனை குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவருமாக இருவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து 85 லீற்றர் கசிப்பும் , ஆயிரத்து 250 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் 5 பேரும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்ட னர். (ஐ-113)

# மயான வீதி சீரமைப்பு

முல்லைத்தீவு, மே 16

வட்டக்கச்சி வட்டாரத்தில் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படா திருந்த கட்சன் வீதிக்கும் ஆறுமுகம் வீதிக்கும் இடைப்பட்ட மயானம் செல்லும் வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வட்டக்கச்சி வட்டாரத்தில் 2020 வருட பாதீட்டில் வீதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. (ப-222)

# ஆறு நாள்கள் காட்டுக்குள் சிக்கிய மல்லாவிப் பெண்

முல்லைத்தீவு, மே 16

கீரை பிடுங்குவதற்குக் காட்டுக்குள் சென்ற பெண் ஒருவர் கடந்த ஆறு நாள்கள் காட்டில் சிக்கிக்கொண்ட சம்பவம் முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பகுதியில் நடந்துள்ளது.

மல்லாவி ஒட்டங்குளம் என்ற பகுதி யைச் சேர்ந்த குணசிங்கம் கனகமலர் (வயது44) என்ற பெண்ணே இவ்வாறு காட்டுக்குள் சிக்கிக்கொண்டார்.

கடந்த 4ஆம் திகதி தனது வீட்டுக்கு அண்மையாக உள்ள காட்டுப்பகுதியில் கீரை வகை ஒன்றை பறிப்பதற்காகச் சென்றுள்ளார். எனினும் அவர் வீடு திரும்பாத நிலையில் அவரை தொடர்ந்து தேடியும் கண்டுபிடிக்க முடி யாத குடும்பத்தினர் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள னர். அதேவேளை அயல் கிராமங்களுக்கும் தகவல் வழங்கியிருந்த னர். ஆறு நாள்கள் கடந்த நிலையில் 10ஆம் திகதி ஒட்டங்குளத்தின் அயற்கி ராமங்களில் ஒன்றான பெரியமடு காட்டுப் பகுதியில் அந்தப் பெண்ணை அவதானித்ததாக அந்தக் கிராமத்து மக்கள் கனமலரின் குடும்பத்தாருக்கு தகவல் வழங்கினர். அங்கு சென்ற குடும்பத்தினர் பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்தனர். கிரை பறிக்கச் சென்று வழிமாறிச் சென்றதாகத் தெரி வித்த கனகமலர் தற்போது பாலைப்ப ழக் காலம் என்பதால் பாலைப்பழம் மற்றும் காட்டில் காணப்பட்ட உணவுப் பொருள்களை உண்டு தனது பசியைப் போக்கியதாகத் தெரிவித்தார். முன் னைய காலங்களில் காட்டுக்குச் செல்ப வர்கள் தடம்மாறி பயணிக்கும் சம்பவங் கள் பல, இடம்பெற்றிருக்கின்றன. அவ்வா றான சம்பவங்களை காடேறி அழைத் துச் செல்வதாக வன்னியில் மூத்தவர்கள் பேசிக்கொள்வது வழக்கம். (ப-222)

# தாக்குதலில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, மே 16

இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்கான 47 வயதுக் குடும்பத் தலை வர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவம னைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு கெற்பேலி மேற்கில் இடம் பெற்றுள்ளது. தாக்குத லுக்கு இலக்காகி காயம டைந்த அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா கேதீஸ்வ ரன்(வயது 47) என்னும் குடும்பத் தலைவரே சாவ கச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவம னைக்கு கொண்டுசெல்லப் பட்டார். (ப-9)

## நாளை மின்தடை

*யாழ்ப்பாணம், மே 16*

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரியகுளத்தில் இருந்து முட்டாசுக்கடை சந்தி வரை,மணிக்கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி,ராஜா திரையரங்கு, வெலிண்டன் சந்தி, பெரியகடை வீதி, பழைய தபாற்கந்தோர் வீதி, ஸ்ரான்லி வீதி, லிங்கம் கீறின் கவுஸ், சிறிநதியா நகை மாளிகை, ரொப்பாஸ், அன்னைநாகா பூட் சிற்றி, சிவராதா, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலவலகம் ஒல்ஒஎல்சி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும். இதேவேளை நாளை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீச்சரம் வரை,வங்காலை பிரதேசம்,சீனத்துறைமுகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

*கொழும்பு, மே 16*

நாட்டில் தொடர்ந்து வரும் அதிக மழையுடனான வானிலை காரணமாக 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை, காலி, மாத்தளை, குருணாகலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலி மாவட்டத்தின் நாகொட, பத்தேகம, அக்மீமன, எல்பிட்டிய, நியகம மற்றும் போத்தல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின், எஹெலியகொட, குருவிட்ட,கிரியெல்ல, அஹங்கம, கலவான, நிவித்திகல, எலபாத்த, இரத்தினபுரி மற்றும் பெல்மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று களுத்துறை மாவட்டத்தின், அகலவத்த, பாலிந்த நுவர, புலத்சிங்கல, வலல்லவிட்ட, ஹொரான, இங்கிரிய மற்றும் மதுகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், மாத்தறை மாவட்டத்தின், பிட்டபெத்தர மற்றும் கொடபொல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், கொழும்பு மாவட்டத்தின் சீதாவாக்க பிரதேச செயலாளர் பிரிவுக்கும், கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட, யட்டியாந்தோட்ட மற்றும் தெரணியகலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மினிப் புயலால் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு கொடுப்பனவு

*சாவகச்சேரி, மே 16*

தென்மராட்சி தெற்கு, மறவன்புலவுப் பகுதியில் கடந்த மாதம் வீசிய மினிப் புயலால் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு முதற்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் சுமார் 10 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு இடர் முகாமைத்துவ திணைக்களத்தால் பிரதேச செயலகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-9)

## சாரதி, நடத்துநர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

*கொழும்பு, மே 16*

கொழும்பு கோட்டை பஸ் தரிப்பிட நிலையச் சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் அதற்கு அண்மையில் நாளாந்த வருமானம் பெறும் தொழிலாளிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. கொழும்பு மாநகர சபையின் பிரதான அதிகாரி றுவன் விஜேமுனி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கொவிட்19 தொற்றின் காரணமாக முடக்கப்பட்டிருந்த கொழும்பு நகரின் முக்கிய பகுதிகள் அன்றாட வாழ்வுக்கு ஏற்ற வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது பொதுச் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (க)

## “அம்பான்” புயலால் மழை அதிகரிக்கும்

*கொழும்பு, மே 16*

குறைந்த அழுத்தப் பிரதேசம், தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் அண்மையாகவுள்ள தென் அந்தமான் கடற்பரப்புகளிலும் தொடர்ந்து நிலைத்தி ருக்கின்றது. அது மேலும் வலுவடைந்து வடமேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. வங்கக் கடலில் தெற்கு மத்திய பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று புயலாக உருவெடுக்கின்ற நிலையில், இந்த புயலுக்கு தாய்லாந்து வழங்கியுள்ள ‘அம்பான்’ என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன் தாக்கம் காரணமாக நாடு முழுவதும், குறிப்பாக நாட்டின் தென்மேற்கு பகுதியில் மழையுடனான வானிலை இன்றிலிருந்து அடுத்த சில நாள்களுக்கு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றுவளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தென், மேல் சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில், குறிப்பாக ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் அண்மையாகவுள்ள தென் அந்தமான் கடற்பரப்புகளிலும் ஒரு குறைந்த அழுத்தப் பிரதேசம் விருத்தியடைந்துள்ளது. அது மேலும் வலுவடைந்து வடமேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் குறித்து அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (எ)

## ஜப்பானிலிருந்து 235 பேர் நாட்டுக்கு

*கொழும்பு,மே 16*

கொவிட் 19 வைரஸ் தொற்று காரணமாக, ஜப்பானில் சிக்கியிருந்த 235 இலங்கையர்கள் இன்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர். ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல். 455 ரக விமானத்தின் ஊடாக இவர்கள் அனைவரும் இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.(க)



கொய்யாத்தோட்டம் ஜே/66 கிராம அலுவலர் பிரிவுக்கு கை கழுவும் தொட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதற்கான நிதி உதவியை கொய்யாத்தோட்டம் இளைஞர் நற்பணி மன்றத்தினர் அண்மையில் வழங்கியிருந்தனர். (ஐ-23)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 16.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.